www.tamilarangam.net

சோசலிசத் தொழிலாளர் கழகம்.
நான்காம் அகிலத்தின் ஜெர்மன் கிளை
Bund Sozialistischer Arbeiter
German Section of the Fourth International

# இனவாதத்தையும் யுத்த அச்சுறுத்தலையும் எதிர்

# சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்திற்காக

பிராங்பேட் 1992 டிசம்பர் 5. / 6.
Frankfurt am Main 1992 December 5. /. 6

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சோசலிசத் தொழிலாளர் கழகம்
BUND SOZIALISTISCHER ARBEITER

சோசலிசத் தொழிலாளர் கழகம் (BSA) நான்காம்அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் ஜெர்மன் பிரிவாகும் .

1938 ல் நான்காம்அகிலம் லியோன்ரொக்சியால் மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், லக்சம்போர்க், லீப்னெக்ட் ஆகியோரின் முன்னோக்கினையும், வேலைத்திட்டத்தினையும் ஸ்டாலினிசத்தின் துரோகத்திலிருந்து பாதுகாப்பதற்காகவும், வளர்த்தெடுப்பதற்காகவும் ஸ்தாபிக்கப்பட்டது. சர்வதேசக்குழு 1953 ல் பப்பலோவாதத்திற்கெதிரான போராட்டத்தில் உருவாகியது.

பப்பலோவாதம் ஒரு திரிபுவாதப் போக்கு. பப்பலோ, ஏர்னஸ்ட் மண்டேல் ஆகியோரின் தலைமையில் இது நான்காம் அகிலத்தை ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கு அடிபணிவதை முன்வைத்தது .

# இனவாதத்தையும் யுத்த அச்சுறுத்தலையும் எதிர் !

## சர்வதேசதொழிலாளவர்க்கத்தின் ஐக்கியத்திற்காக சோலிசத் தொழிலாளர் கழகத்தின் அறைகூவல்!

( BUND SOZIALISTISCHER ARBEITER )

கிட்லர் ஆட்சியினது வீழ்ச்சிக்கும், இரண்டாவது உலகயுத்தத்தின் முடிவிற்கும் பின்னால் 50 வருடங்கள் நிறைவுபெறுவதற்குமுன்னால் ஜெர்மனியில் இனவாதமும், இராணுவாதமும் மீண்டும் தலையைத் தூக்குகின்றன.
ஜெர்மனியின் மறு இணைப்பைத் தொடர்ந்து ஜெர்மன் இராணுவத்தினை உலகம் முழுவதும் போரில் ஈடுபடுத்துவதற்க்கான தயாரிப்புகள் திட்டமிட்டவகையில் முன்னேக்கி தள்ளப்படுகின்றன. அதேவேளை இதைனை நடைமுறைப் படுத்துவதற்கு தேவையான மாற்றங்களை அடிப்படை அரசியல் சட்டத்தில் ஏற்படுத்துவதற்க்கான சம்மதத்தை ஜெர்மன் சமுகஜனநாயகக்கட்சி (SPD) சமிக்கை செய்திருக்கின்றது.
இதே நேரத்தில் நாடு முழுவதும் பெருக்கெடுக்கும் இனவாத தாக்குதல் அலையானது யூதர்களுக்கெதிரான நாசிகளின் கொடுமைகளை நினைவுக்கு கொண்டு வருகின்றது. ஓகஸ்ட் மாதத்தில் ரொஸ்ரொக் (Rostock) நகரில் அரசியல் அகதிகளின் விடுதிக்குமேல் தாக்குதல் தொடுக்கப்பட்டதிலிருந்து வெளிநாட்டுகாரர்களின் குடும்பங்களின் தங்குமிடங்களுக்கு கல்லுகளும், எரிகுண்டுகளும் வீசித்தாக்குதல் நடத்தப்படாமல் ஒரு இரவு கூட விடியவில்லை. கடந்த இரண்டு வருடங்களில் 3000 ம் இப்படியான தாக்குதல்கள்பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த வருடத்தில் மட்டும் 10 பேர் கொல்லப்பட்டிருப்பதுடன் 700 பேர் காயப்பட்டுமிருக்கின்றனர்.
இதுதொடர்பாக அரசு சகிப்புத்தன்மையையும் அங்கீகாரத்தையும்வெளிக்காட்டுகின்றது. ரொஸ்ரொக் நகரில் நிகழ்ந்ததைப் போன்று வெளிநாட்டவர் தங்களது உயிருக்கு போராடுகையில் பொலிஸ் கைகளைக்கட்டிக் கொண்டு சும்மா நிற்கின்றது. இதே வேளையில் நீதியும் சட்டமும் ஆபிரிக்க, ஆசியத் தொழிலாளர்கள் கொலை செய்யப்படுவதை தட்டிக்கழிக்க கூடிய சிறு குற்றங்களாக காண்கின்றது.

இக்கொலைக்கான தண்டனையை எப்படி எபர்ஸ்வால்ட் (Eberswalde) நகரத்தில் அங்கோலாவைச் சேர்ந்த அமேடேயொ கியோவா (Amadeu Kiowa) வின் கொலைவழக்கில் கொலைகாரர்களுக்கு வழங்கியது போன்று மிக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறைந்ததாகவே தீர்ப்பளிக்கின்றது. இக்கொலைகாரர்களுக்கு 2 லிருந்து 4 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
ஜெர்மன் அரசாங்கமும், அரசியல் கட்சிகளும் இந்த பாசிசகும்பலுக்கு முன்னால் அதனது வேலைத்திட்டத்தை ஏற்றுகொள்வதன் மூலம் அடிபணிந்து போகின்றனர்.

"ஜெர்மனிஜெர்மன்காரனுக்கே" (Deutschland den Deutschen) என்ற கோசம் தனிய வலதுசாரி குழுக்களின் போர்க்குரல் என்ற நிலையிலிருந்து நீண்டகாலத்திற்கு முன்னரே மாற்றமடைந்து அரசாங்கத்தின் அரசியலின் பிரதானமான பாதையாகிவிட்டது. அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றுவதிலிருந்து, ஜெர்மன் இராணுவத்தினை அரசியல் தஞ்ச நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது வரை அனைத்தும் நூறாயிரக்கணக்கான அகதிகளை மிகவும் விரைவில் நாட்டைவிட்டு துரத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படுகின்றது.

சமுகஜனநாயகக்கட்சியும் (SPD) பசுமைக் கட்சியின் (Grünen) ஒருபிரிவும் இந்தப் பாதையை முழுமையாக ஆதரிக்கின்றன. இது மக்கள் மத்தியிலிருக்கும் வெளிநாட்டுகாரர்களுக்கு கெதிரான வெறுப்பை வேரோடு பிடுங்குவதற்கு வழிவகுக்குமாம்! என்ன கோழைத்தனமான உழுத்துப்போன நொண்டிச்சாட்டு! இது உண்மையில் பாசிசவாதிகளின் சக்கரங்களின் மீது தண்ணீரை வாரியிறைப்பதற்கு சமமாகும்.

பாசிசவாதிகளின் கோரிக்கைகளுக்கு பொன் (Bonn) அரசியல்கட்சிகள் வளைந்து கொடுப்பதை அவர்கள் தங்களுக்கு கிடைத்த தங்கு தடையற்ற வெற்றி எனக் கொண்டாடுகின்றனர்.

## "அனைத்து ஜனநாயகவாதிகளினதும் ஐக்கியம் "

வளர்ந்துவரும் வெளிநாட்டுக்காரர்கள் மீதான வெறுப்பிற்கு எதிராக நற்குணம் பேணும் குற்றச்சாட்டுக்கள் சமீபகாலங்களில் ஒருவிதகுறையுமில்லாமல் முன்வைக்கப்படுகின்றன. அரசியல்வாதிகள், இராஜதந்திரிகள், தொழிற்சங்கதலைவர்கள், நானுவிதபாதிரிமார்கள் அனைவரும் பாராளுமன்றங்களிலும், நினைவுதினகொண்டாட்டங்களிலும் கூட்டங்களிலும், பிரார்த்தனைகளிலும் ஒழுங்கான இடைவெளிகளில் வலதுசாரித்தீவிரவாதத்தினை கண்டனம்செய்கின்றனர். தங்கள் பேச்சுக்களை முடிக்கும் போது ஒவ்வொருமுறையும் தவிர்க்காமல் "அனைத்து ஜனநாயகவாதிகளின் ஐக்கியம்" என்ற கோரிக்கையை முன்வைப்பதுடன் அரசின் கடும் நடவடிக்கைகளிற்கும் கோரிக்கை விடுகின்றனர்.
" அனைத்து ஜனநாயகவாதிகளினதும் ஐக்கியம் " என்றதின் கருத்து யார் திட்டமிட்டவகையில் பாசிச விதைக்கு விளைநிலம் தயார் செய்கின்றார்களோ அவர்களுடன் ஐக்கியப்படுதல் என்பதாகும். கோல் (Kohl) அரசாங்கத்துடனும், அதற்கு பின்னால் தங்களது மூலதனங்களின் நலன்களுக்காக இருப்போருடன் ஐக்கியப்படுதலாகும்.
தனிய கிழக்கு ஜெர்மனியில் மாத்திரம் மறுஇணைப்பிற்குப்பின்னால் ஐந்து மில்லியன்களுக்கு மேற்பட்ட வேலையிடங்களை அழித்ததிற்க்கு இந்த அரசாங்கம்



பதில் சொல்லவேண்டும். தொழிற்துறை முற்றுமுழுதாக தரைமட்டமாக்கப்பட்டிருக்கின்றது. பத்தாயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். எண்ணுக்கணக்கற்ற பள்ளிக்கூடங்களும், குழைந்தைகள் பராமரிப்பு நிலையங்களும், கலாச்சார நிலையங்களும், மருத்துவமனைகளும் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு முழுத்தலைமுறை இளம்சமுதாயத்தின் எல்லா விதமான எதிர்கால முன்னேக்கும் கொள்ளையடிக்கப்பட்டிருக்கின்றது .

" தியாகமும் ", " ஒருமைப்பாடும் " கிழக்கிற்க்கு தேவை என்ற முடுதிரையின் கீழ் மேற்க்கில் தொழிலாளர்களின் பைகளை கொள்ளையடிக்கும் படையெடுப்பு பாரியளவில் கட்டவிழ்த்துவிடப்பட்டிருக்கின்றது. RWI ஸ்தாபனத்தின் அறிக்கையின்படி இவ்வருடம் தொழிலாளர்கள் 4 வீதமான தங்களது மொத்த சம்பளத்தினை அதாவது 260DM வரை மாதாந்தம் அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளாகவும், வரியாகவும் " ஐக்கியத்திற்கான செலவுகள் " என தண்டம் கட்டியுள்ளனர்.
உத்தியோகத்தர்கள் 3,5 % கட்டுகையில் சுயதொழில்புரிவோரும், அரசசேவையாளர்களும் 1,5% இலிருந்து 2 % மட்டுமே கட்டியுள்ளனர். இந்த வகையினால் அரசினால் கறந்தெடுக்கப்பட்ட 60 இலட்சம் கோடி (Billion) மார்க்குகள் கிழக்கிலிருக்கும் தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு போய் சேரவில்லை பதிலாக குறுக்கு வழியில் வங்கிகளினதும், வர்த்தகநிறுவனங்களினதும், சொத்துக்களை ஊகவாணிபம் செய்வோரினதும் , இன்னும் பல விதமான அதிஷ்ட வேட்டையாளர்களினதும் காசுப்பெட்டிகளில் குவிகின்றது. இவர்கள் முன்னாள்கிழக்குஜெர்மனியை " சுத்தம் " நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் சொத்துக்களை தேடுகின்றனர்.

" ஜனநாயகவாதிகளின் ஐக்கியம் " என்பது இந்த அரசியலுக்கு SPD, தொழிற்சங்கங்கள் மூலமாக ஆதரவளிப்பதை வேறு சொல்லுகளில் வெளிப்படுத்துவதே தவிர வேறொன்றுமில்லை. இதனை நடைமுறையில் நிறைவேற்றுவது கோல் [Kohl] அரசாங்கத்துடன் SPD யும் தொழிற்சங்கங்களும் செய்து கொண்ட " ஒருமைப்பாட்டு ஒப்பந்தம்"மூலமாகும்.
இது தொழிலாளர்கள், வேலையற்றோர், இளைப்பாறியோர், நோயாளர்கள், இளைஞர்கள், வெளிநாட்டுக்காரர்கள் அனைவருக்கும் எதிரான ஒரு ஒப்பந்தமாகும். வேலையிடங்களை அழித்தொழிப்பது மேற்க்கிலும் தங்குதடையின்றி தொடர்ந்து நடத்தப்படும் போது சுகாதாரவசதிகளை அழித்தொழிப்பது, சமூகசேவைகளில் பாரிய வெட்டுக்களை மேற்கொள்வது, அரசியல்தஞ்ச சட்டத்தை இல்லாதொழிப்பது, உலகம் முழுவதும் ஜெர்மன் இராணுவத்தினை ஈடுபடுத்துவதற்கான தயாரிப்புக்களை செய்வது போன்ற நடவடிக்கைகளில் SPD அரசிற்கு ஆதரவளிக்கின்றது. தொழிற்சங்கங்கள் தங்கள் பங்களிப்பாக தொழிலாளர் பக்கமிருந்து வரும் ஒவ்வொரு எதிர்ப்புக்களையும் முளையில் கிள்ளும் பணியை செய்கின்றன. இந்த ஒப்பந்தம் தான் வலதுசாரி வார்த்தையாலக்காரர்களின் கைகளுக்குள் தொடர்ந்தும் ஆதரவாளர்களை தள்ளிகொண்டிருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைமார் குடியரசின் (Weimarer Republik) பாடங்கள் தெரியப்படுத்துவது பாசிசம் சீரழிந்த சமூகதட்டுகளிலிருந்து செல்வாக்கைப் பெறுகின்றது. தொழிலாளவர்க்கம் இந்த தட்டுக்களை சமூகநெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கான வழியை காட்டுவதற்கு சக்தியற்றது என்பது நிருபிக்கப்படும்போதுஎன்பதாகும் எப்பொழுது மில்லியன் கணக்கானோரின் தலைவிதியைத் தீர்மானிக்கும். பாரிய முதலாளித்துவ பொருளாதர நலன்களுக்கு எதிரான போராட்டம் தொழிலாளவர்க்கத்தினதும் அதனது கட்சிகளினதும் செயலற்ற தன்மையால் தடை செய்யப்படுகின்றதோ அப்பொழுது "என்ன செய்யவேண்டும் நிலைமைகள் சீரடைவதற்கு" என்ற கேள்விக்கு விடையளிக்கும் பாசிசவாதிகளின் பின்னால் கூட்டம் சேருகின்றது. அவர்களது விடை : "எல்லாவற்றிற்கும் மேலாக ஆகக் கீழ்மட்டத்திலிருப்பவர்களை அடக்கி ஒடுக்கு என்பதாகும்".

தொழிற்சங்கங்கள், சமுகஜனநாயகக்கட்சி (SPD), ஜெர்மன் கம்மியூனிஸ்ட் கட்சி (KPD) ஆகியவற்றினால் தொழிலாள வர்க்கம் முடமாக்கப்பட்டதுதான் தனது எழுச்சிக்கும் அதிகாரத்திற்க்கு வருவதற்கும் வழிதிறந்தது என்பதற்கு கிட்லர் ஏற்கனவே நன்றி சொல்லியிருக்கின்றார். வைமார் குடியரசிற்கும் அதனது அவசர காலவிதிகளுக்கும் SPDயும், தொழிற்சங்கங்களும் அடிமைத்தனமாக கீழ்ப்படிந்து தொழிலாளவர்க்கத்தை நிராயுத பாணியாக்கியதுடன் வறுமைக்குள் தள்ளப்பட்ட குட்டிமுதலாளித்துவ தட்டுக்களை வரிசைவரிசையாக பாசிஸ்டுக்களின் கூடாரத்தினுள் படையெடுக்கப் பண்ணியது. இவர்களது வறுமைக்கு காரணமாக பாசிசவாதிகள் தொழிலாளவர்க்கத்தையும், யூதர்களையும் பலிக்கடாவாக்கினர்.

இறுதியில் தொழிலாளவர்க்கத்தின் முடமாகிய நிலையை உடைத்தெறிய முடியாத ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் கையாலாகாத் தன்மையானது கிட்லரை ஆட்சிக்கு கொண்டுவந்தது. ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிசத்தின் சீரழிந்த செல்வாக்குக்கு கட்டுப்பட்டு நாசிகளுக் கெதிரான ஒரு ஐக்கிய முன்னணியில் பங்கு கொள்வதை கடுமையாக எதிர்த்தது, SPD சமுகபாசிசவாதிகள் என்றும் NSDAP (கிட்லரின் பாசிச ஜெர்மன் சோலிச தொழிலாளர் கட்சியும்), SPD யும் இரட்டைச்சகோதரர்கள் என்றும் பட்டம் சூட்டியது. இந்த வகையில் பாசிசத்திற்கு எதிரான சக்திவாய்ந்த ஒவ்வொரு எதிர்தாக்குதலையும் அது தடைசெய்தது.

ஒரு சந்தேகமுமில்லை இன்று தொழிலாளவர்க்கம் வெளிநாட்டுகாரரையும் அரசியல் அகதிகளையும் பாதுகாப்பதை தங்கள் கைகளில் எடுத்து கொண்டு அதே நேரத்தில் கோல் அரசாங்கத்திற்கும், Treuhand (பழைய DDR இல் முதலாளித்துவ அறிமுகம் செய்யும்) நிறுவனத்திற்கும்அதன் பின்னால் இருக்கின்ற பாரிய நிறுவனங்களுக்கும் எதிராக சக்திவாய்ந்த தலையீட்டினை மேற்கொண்டால் இந்த பாசிசப்பிசாசுத் தோற்றமானது இரவோடு இரவாக காற்றில் கரைந்துவிடும்.

## அரசை நோக்கிய கூக்குரல்

"அனைத்து ஜனநாயகவாதிகளின் ஐக்கியம் " என்ற கூக்குரலோடு பக்கம்



பக்கமாக ஒரு பலமான அரசிற்கான கோரிக்கை எதிரொலிக்கின்றது. CSU ( கிறிஸ்தவ சமூககட்சி) அனைத்து ஊர்வலங்களையும் முழுமையாக தடைசெய்யும் வரையிலான கூர்மையான சட்டங்களுக்காக கோரிக்கை விடுகின்றது. CDU, FDP, SPD, Grünen கட்சிகள் மேலதிகமாக திறமையாகப் பயிற்றுவிக்கப்பட்ட பொலிஸ்காரர்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றது. PDS, DKP, MLPD கட்சிகள் அனைத்து பாசிச இயக்கங்களையும் தடைசெய்ய வேண்டும் என கையெழுத்து வேட்டையாடுவதுடன் சுவரொட்டிகளையும் ஒட்டுகின்றனர்.

சோசலிச தொழிலாளர் கழகம் (BSA) இந்த கோரிக்கைகளை தீர்மானகரமாக நிராகரிக்கின்றது.

அரச அதிகாரத்தைப் பலப்படுத்துவதும் பாசிச போக்குகளின் வளர்ச்சியும் ஒரே பதக்கத்தின் இரண்டு பக்கங்களாகும், இறுதி ஆய்வுகளில் இரண்டும் தொழிலாளவர்க்கத்திற்கெதிராக முதலாளித்துவஆட்சி முறையைப் பாதுகாப்பதையே நோக்கியிருக்கின்றது. பாசிசத்தை கட்டுப்படுத்துவது என்றதன் பெயரால் மட்டுப்படுத்தப்படும் ஜனநாயக உரிமைகள் நாளை தொழிலாளர்இயக்கங்களை அடக்கியொடுக்குவதற்காக சேவையில் ஈடுபடுத்தப்படும். பாசிசஇயக்கங்களை தடைசெய்வது என்பது முதலாளித்துவத்தின் சோசலிச எதிர்ப்பாளர்களை வேட்டையாடுவதற்கான முன்னுதாரணமாக்கப்படும். தற்பொழுது ஏற்கனவே பாசிசக்குண்டர் குழுக்களும் பொலிசும், நீதி, நிர்வாகமும் காட்டும் ஆதரவு கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டிய தொன்று. வெளிநாட்டுக்காரர் மேலான தாக்குதலை கைகளைக் கட்டிக்கொண்டு எதுவும் செய்யாமல் பார்வையாளர்களாக பொலிஸ் கண்காணிப்புப் பிரிவினர் செயற்படுவதையோஅல்லது வன்முறைகளை மேற்க்கொள்ளும் குற்றவாளிகளை கைதுசெய்து விசாரணை செய்வதற்கு மறுப்பதையோ குறித்து வெளியாகும் செய்திகள் எண்ணுக் கணக்கற்றவை. ரொஸ்ரொக் நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட வியட்நாமியர் எரிந்து கொண்டிருக்கும் கட்டிடமொன்றில் உயிருக்கு போராடும் போது மணித்தியாலக் கணக்காக பொலிஸ் கண்ணில் தென்படவில்லை. இருந்தபோதிலும் மறுநாள் அதே இடத்தில் நடைபெற்ற பாசிச எதிர்ப்பு ஊர்வலத்தை தடைசெய்வதற்காக ஆயிரக்கணக்கில் படைதிரண்டிருந்தனர். நீதித்துறை வருடக்கணக்காக சமாதானவாதிகளின் அமைதியான சத்தியாக்கிரகம் இருத்தலை பொது அமைதிக்கு பங்கம் விளைவிற்க்கும் வன்முறை எனக் குற்றம்சாட்டி வேட்டையாடியது. ஆனால் இந்த இனவாத நோக்கம் கொண்ட தாக்குதல்களின் மேல் வெளிப்படையாகவே கருணை கட்டுகின்றது. இந்த நிலைப்பாட்டை முன்னால் அரசு பொதுச்சட்டத்தரணி ரெப்மான் (Rebmann) வலதுசாரிகளின் இந்த வன்முறையை இடதுசாரிகளின் வன்முறையுடன் ஒப்பிட்டு பார்க்க முடியாதென *Rheinischen Post* பத்திரிகையில் நியாப்படுத்தியுள்ளார் " வலது பயங்கரவாதம் "எனக்கூறுவது பிழை. இது " மிகவும் சாதரணமான"குற்றவாளிகளைப் பற்றியது, இவர்கள் ஒருபோதும் அரசை நிர்மூலமாக்க விரும்பவில்லை பதிலாக வெளிநாட்டுக்காரர்களுக் கெதிரான வெறுப்பையே வெளிப்படுத்துகின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SPD உட்பட்ட அனைத்து அரசகட்சிகளும், பொலிசும், நீதித்துறையும் திட்டமிட்ட ரீதியில் உசார்ப்படுத்தப்பட்டது. 1989 ன் இலையுதிர்காலத்தில் கொனேக்கர் (Honecker) ஆட்சிக்கெதிரான எழுச்சியை கறுப்பு, சிவப்பு. பொன்னிற கொடிகளுக்குள் மூழ்கடிப்பதற்காக தங்களது முழுமையான சக்தியை செலவளித்ததிலிருந்து தொடங்கி ஒரு சந்தர்ப்பத்தையும் தவறவிடாமல் இந்த கட்சிகள் பிற்போக்குத்தனமான இனவெறிப்போக்குகளை தூண்டி விடுகின்றனர்.
சமீபத்தில் ஊழல் குற்றச்சாட்டுகளின் பேரில் பதவியிழந்த நோர்ட்றைன் வெஸ்ட்பாலின் (Nordrhein Westfalen) சமூகமந்திரி கைனமான் ( Heineman) போன்று ஏனைய SPD அரசியல்வாதிகளும் ஒளிவு மறைவின்றி சிந்தி, ரோமா மக்களை வேட்டையாடுகின்றனர். இந்த மக்களில் அரைக்கோடியானோர் தேசியசோலிச மக்கள்படுகொலைக்கு பலியாக்கப்பட்டுருந்தனர். கைனமான், ஸ்பிறிங்கர் நிறுவனத்தின் *Welt* பத்திரிகையில் " இணைந்து கொள்ளமுடியாதென்று வெளிப்படையாகத் தெரியும் இந்தக் குழுக்களை கூடியகெதியில் இவர்களது நாட்டிற்க்கு திருப்பியனுப்ப வேண்டும் " என்று கோரியிருந்தார்
இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கோல் அரசாங்கமானது சாவசெஸ்கோவின் (Ceausescus) வாரிசுகளோடு இந்த சிந்தி, ரோமா மக்களை திருப்பி ருமேனியாவிற்கு அனுப்புவதற்க்கான உடன்பாட்டிற்கு வந்துள்ளது. ருமேனியாவில் சிந்தி, ரோமா மக்கள் மிருகத்தனமாக வேட்டையாடப்படுகின்றனர்.

செல்ஸ்விக் கோல்ஸ்ரைன்னில் (Schleswig - Holstein) SPD தலைவர் எங்கோல்ம் (Engholm) "தலைக்கணக்கெடுப்பு" முறையைஅரசியல் தஞ்சம் கோருவோர் மீது நடைமுறைப்படுத்தியுள்ளார்.இது நாசிகளின் சித்திரவதை முகாம்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு புகழ் எடுத்த கேடு கெட்ட முறையாகும்.

இப்பட்டியலை வேண்டியளவிற்கு நீட்டிக் கொண்டே போகலாம்.

CDU,CSU கட்சிகள் பாசிஸ்டுக்களுக்கு வளைந்து கொடுப்பதானது முதலாளித்துவ பத்திரிகைகளே முகம் சுளிக்குமளவிற்கு மோசமாகியிருக்கின்றது.

இதனை 10.10.92 திகதியிட்ட *Frankfuter Rundschau* பின்வருமாறு கருத்து தெரிவித்தது : "இந்த வார இறுதியில் மீண்டும் வெடிகுண்டுகள் அகதிகள் வீடுகளை நோக்கி பறந்தால், வெளிநாட்டுக்காரர் தாக்கப்பட்டு, உயிரோடு கொழுத்தப்பட்டு, யூதர்களின் சவக்காலைகள் உருக்குலைக்கப்பட்டால் பாதிக்கபட்டவர்கள் முன்னிலும் பார்க்க குற்றச்சாட்டுக்களை பொன் (Bonn) ஐ நோக்கி எழுப்ப வேண்டும். வெள்ளிக்கிழமை நடந்ந உள்நாட்டு மந்திரிகளின் கூட்டத்தில் CDU,CSU சாதித்தது மனிததன்மைக்கு எதிரான இந்த வெட்கம்கெட்ட குற்ற செயல்களுக்கு உதவியளித்தது மட்டுமில்லை தூண்டியும் விட்டதேயாகும்."
இந்த அளவிற்க்கு பகிரங்கமாக வலதுசாரி போக்குகள் அரச கட்சிக்குள் ஏற்கனவே குடி கொண்டிருக்கின்ற தென்றால், இறுதியாக இது தனித்தனி பொலிஸ்காரர்,



நீதவான் போன்றோரது அபிப்பிராயங்கள் அல்ல பதிலாக அரசின் வர்க்ககுணும்சமாகும். இந்த அரசு சகல முதலாளித்துவ வர்க்க நலன்களையும் பாதுகாக்கின்றது. இது தவிர்க்கப்பட முடியாதபடி பாசிச போக்குகளை முன்னணிக்கு கொண்டு வருகின்றது .
அரசினையும், தொழிற்துறையையும், சேர்ந்த வட்டங்களிலிருந்து பலமான அரசியல், பொருளாதார ஆதரவு இல்லாமல் கிட்லர் பவாரியாவின்(Bayern) சாராயத்தவறணைகளின் புகைமண்டலம் நிறைந்த பின்னறைகளிலிருந்து வெளியில்வந்திருக்கமுடியாது என்பதில் சந்தேகமில்லை. முதலாளித்துவத்தின் பல பிரதிநிதிகளுக்கு தனிப்பட்ட முறையில் கிட்லரின் அவலட்சணமான வார்த்தையாலங்கள் ரசிக்ககூடியதாக இல்லாவிடினும் கிட்லரை அவர்களுக்கு தேவைப்பட்டது. ஏனெனில் குட்டிமுதலாளித்துவத்தின் சீரழிந்த சக்திகளையும், உதிரிப்பாட்டாளிகளையும் தொழிலாளவர்க்கத்தை வேட்டையாடுவதற்காக தூக்கிநிறுத்துவது எப்படி என்பது கிட்லருக்கு தெரிந்திருந்தது.
இறுதியில் மனச்சாட்சியின் உறுத்தல்களை வர்க்கநலன்கள் வெற்றியடைந்தது. ஒரு சோசலிசப்புரட்சியின் அபாயத்தை முறியடிப்பதற்கு நாசிகள் தேவைப்பட்டார்கள்.
கிட்லர் அரச அலுவலகத்திற்கு (Reichkanzlei) குடியேறினுர். இதை செய்வதற்கு அவர் ஆயுதம் தாங்கிய இராணுவச்சதியையோ அல்லது பேர்லின் நோக்கி அணிவகுப்பையோ செய்யவில்லை. இந்த பதவியை கின்டன்பேர்க் (Hindenberg) அவருக்கு கையளித்தார் மறுபக்கத்தில் கின்டன்பேர்க்கை zentrum (அன்றைய வலதுசாரி அரசியல் கட்சி) SPD இணைந்து ஐக்கியப்பட்ட சக்திகளாக அவரை ஜனாதிபதியாக தெரிவு செய்திருந்தனர். அரசஇயந்திரங்களிடமிருந்து கிட்லருக்கு ஒரு வித ஆபத்தும் இருக்கவில்லை. பொலிஸ், நீதித்துறை, இராணுவம் தங்களது புதிய எஜமானுக்கு மனநிறைவுடன் சேவை புரிந்தன.
1945 ல் இதே அரசஇயந்திரம் கிட்டதட்ட ஒரு விதமாற்றமுமில்லாமல் ஜெர்மன் சமஷ்டி குடியரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிட்லரின் ஆட்சியின் பேரில் தீர்ப்புக்களை கூறிய ஒரு நீதவான் தன்னும் ஒரு பொழுதாவது அந்த தீர்ப்புக்களுக்காக பொறுப்பெடுத்து கொண்டது கிடையாது.
பெரும்பான்மையான பொலிஸ்காரர்கள் தொடர்ந்தும் பதவியிலிருக்கின்றுர்கள். இதற்க்கு மாருக நாசிகளுக்கு எதிராக போராடிய பெரும்பான்மையான அங்கத்தவர்களை இழந்த ஜெர்மன் கம்யூனிஸ்ட்கட்சி மீண்டும் 1956ல் தடைசெய்யப்பட்டது. பின்னர் முதலாளித்துவத்தின் எதிர்ப்பாளர்கள் அனைவருக்கும் அரசாங்கசேவையில் சேர்வதற்கான தடைவிதிக்கப்பட்டது.
இந்த அரசு பாசிசப்போக்குகள் தொடர்பாக வைமார் அரசிலும் பார்க்க வேறுவிதமாக நடந்து கொள்ளும் என நம்புவது குழந்தைதனமாகும். பலமான அரசு வேண்டும் என்ற கூக்குரல் அரச ஒடுக்குமுறை இயந்திரத்தைப் பலப்படுத்தவும், தொழிலாளவர்க்கத்தை பிழையான எதிர்பார்ப்புக்களால் பலவீனப்படுத்தவும் மட்டுமே வழிதிறக்கும்.

## சர்வதேசதொழிலாளவர்க்கத்தின் ஐக்கியம்

பாசிச பயமுறுத்தலுக்கு தடை போடுவதற்கான ஒரே ஒரு வழி தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான அணிரளல் மட்டுமேயாகும் .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளவர்க்கத்தின் சுயாதீனமான அணிரளல் மட்டுமேயாகும் .

இதனை SPD யிடமிருந்தும் தொழிற்சங்கங்களிடம் இருந்தும் எதிர்பார்ப்பது என்பது நடக்கமுடியாததை நம்புவதாகும். இந்த ஸ்தாபனங்களில் அடிப்படை சட்டத்தை மாற்றுவது புத்திசாலித்தனமானதோ இல்லையோ என்ற இரண்டாம்தரமான பிரச்சனைகள் தொடர்பாக கருத்து வேறுபாடு இருக்கின்றது. இது தவிர அடித்தளமான கேள்வியில் அதாவது தேசிய " ஜெர்மன் " நலன்கள் தொழிலாளவர்க்கத்தின் நலன்களுக்கு மேல் இருக்க வேண்டும் என்பதில் இவர்கள்அனைவரும் ஐக்கியப்படுகின்றனர்.

எனவே தான் வளர்ந்து கொண்டு வரும் அகதிகளின் பெருக்கத்திற்கு இவர்களது பதில் " எல்லைகளை மூடு " என ஒலிக்கின்றது .எனவே தான் இவர்கள் கோரிக்கை விடுகின்றார்கள் " ஜெர்மன் ஐக்கியத்திற்கு தியாகம் செய் "இதன் மூலம் Treuhand நிறுவனத்தின் சுட்டெரிக்கும் அரசியலுக்கு நிதி வழங்கு என்கின்றார்கள். இதனால் தான் இவர்கள் வேலைக்குறைப்புக்களையும், கடுமையாக்கப்படட வேலைவாங்கும் விரட்டல்களையும் ஆதரிக்கின்றார்கள். இதன் மூலம் " ஜெர்மனியின் போட்டியிடும் தன்மையை " உலகசந்தையில் பாதுகாக்க வேண்டுமாம்.

முளைவிட்டு கொண்டு வரும் பாசிசத்திற்கு எதிரான போராட்டத்திற்கு ஒரு புதிய அடித்தளம் தேவைப்படுகின்றது.

இந்த " ஜெர்மன்நலன்கள் " வங்கிகளினதும்,பெரியதொழில் நிறுவனங்களினதும் நலன்கள். தொழிலாளவர்க்கத்திற்கு தேசிய நலன்கள் கிடையாது. அவர்கள் என்ன பாசை பேசுகின்றார்கள் அவர்களின் தோலின் நிறம் என்ன, என்ன தேசிய இனத்தை அவர்கள் சேர்ந்தவர்கள், எந்த நாட்டில் அவர்கள் வாழ்கின்றார்கள் என்றவைகளிலிருந்து தவிர்ந்து முழுத் தொழிலாளர்களின் நலன்கள் என்பதிலிருந்து தொழிலாள வர்க்கம் ஆரம்பிக்க வேண்டும்.

SPD, அரசகட்சிகள், தொழிற்சங்கங்கள், பெரும் நிறுவனங்கள் ஆகியவற்றின் ஐக்கியமாகிய" அனைத்து ஜனநாயகவாதிகளின் ஐக்கியம் " என்ற இடத்தில் சர்வதேச தொழிலாள வர்க்கத்தின்ஐக்கியம் முன்வைக்கப்பட வேண்டும்.

உலக மக்கள் அனைவரும் செல்வச்செழிப்போடு சமாதானமாக் ஏன் இணைந்து வாழமுடியாது என்பதற்கு ஒரு நியாமான காரணம் கூட காட்டமுடியாது. மனித சமுதாயத்தின் உற்பத்தித்திறனானது இன்றிருப்பதைப் போல முன்னொருகாலத்திலும் இருக்கவில்லை. விஞ்ஞானத்திலும், தொழில்நுட்பத்திலும் ஏற்பட்ட புரட்சிகரமானமாற்றங்கள் முழு உலகஅவலத்தினையும்,ஏழ்மையையும் தோற்கடிக்ககூடிய முன்நிபந்தனைகளை உருவாக்கியிருக்கின்றது.

அப்பிடியிருந்தும் முதலாளித்துவ சமுதாயஅமைப்பு முறை இந்தத்தேவைக்காக உருவாக்கப்படவில்லை. இது மனித சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யவில்லை பதிலாக தொழிற்சாலை உரிமையாளர்களும், பங்கு சந்தை சொந்தகாரர்களுமாகிய முதலாளிகளுக்கு செல்வத்தினையும், அதிகாரத்தினையும் குவிக்கவே உருவாக்கப்பட்டிருக்கின்றது. உலகத்தினை சுற்றி பலம் வாய்ந்த பல தேசிய நிறுவனங்களும், வங்கிகளும் லாபத்திற்காக நடாத்தும் வேட்டையானது உலகசந்தையை கைப்பற்றுவதற்கான கசப்பான போரைக் கட்டவிழ்த்து விட்டுருக்கின்றது.



எண்ணுக் கணக்கற்ற ஆண்கள், பெண்கள், குழந்தைகளின் இரத்தத்தை உறிஞ்சி வேலை வாங்குகின்றனர். இந்தியாவில் மட்டும் 40 மில்லியன் குழந்தைகள் வேலை செய்கின்றனர். அதேநேரத்தில் இந்த நிறுவனங்கள் மில்லியன் கணக்கானோரின் வேலைகளைப் பறித்தெடுக்கின்றன ஏனெனில் தொழிலாளர்களின் சம்பளம் " மிகவும் அதிகமாம் " ஆதலால் தொழிற்சாலைகள் " போட்டியிட முடியாத நிலையில்" இருக்கின்றனவாம். தினசரி 40,000 மக்கள் உலகம் முழுவதும் உணவுப் பற்றுக்குறையினால் மரணமடைகின்றனர். முழு நிலப்பிரதேசங்கள் வறுகியெடுக்கப்பட்டு பாலைவனமாக்கப்பட்டதுடன் ஒரு விததயக்கமுமின்றி சுற்றுச்சூழல் பாழாக்கப்படுகின்றது.

" பொருளாதார ", " அரசியல் " அகதி என்ற தொடர்ச்சியாக அரசியல்வாதிகளால் முன்வைக்கப்பட வித்தியாசமானது நீண்டகாலத்திற்கு முன்பே அதனது எல்லாவிதமான கருத்தை யும் இழந்துவிட்டது.

இதற்க்கு முற்றிலும் எதிராக சமீபத்திய ஆய்வு ஒன்றுபின்வருமாறு கூறுகின்றது," போர், அடக்குமுறை, இயற்கை அழிவுகள் என்பவற்றிலிருந்து மனிதனின் அடிப்படை தேவைகளான பாதுகாப்பு, வாழ்க்கைப்பராமரிப்பு, குடும்பவாழ்க்கை என்பவைகளைப் பாதுகாப்பதற்காக கிட்டத்தட்ட 15 மில்லியன் மக்கள் தங்களுடைய சொந்த நாட்டை விட்டு வெளியேறியிருக்கின்றனர். ஆனால் ஒரு துளிசதவிகிதமே ஐக்கிய நாடுகள் சபையின் விதிகளின் படி உத்தியோக பூர்வமான அகதிகள் என்று கணிக்கப்பட்டிருக்கின்றார்கள் ".

இனவாதம், பாசிசம், தேசியவாதம், போர் என்பன இந்த அமைப்பு முறையின் தவிர்க்க முடியாத சங்கிலித் தொடராகும்.இனவாதம் தொழிலாளவர்க்கத்தை பிரிக்கவும், பலவீனப்படுத்தவும் சேவை செய்கின்றது. பாசிசம் அவர்களது இயக்கங்களை நிர்மூலமாக்கவும்,தேசியவாதம்அவர்களைபுதிய போர்களில் பீரங்கிக்கு தீனியாக மாற்றவும், போர் உலகை மீண்டும் புதிதாக முதலாளித்துவ சக்திகளிடையே பங்கு போடுவதற்கு உதவுகின்றது .

சர்வதேச தொழிலாள வர்க்கத்தை ஒரு புதிய சோசலிச ஒழுங்குமுறைக்கு போராவதற்கு அணிதிரட்டுவதன் மூலம் மட்டும்தான் இந்த விசர்த்தனத்தை நிறுத்த முடியும்.

இந்த போராட்டத்தை நடாத்துவதற்கு ஒரு புதிய அரசியல் கட்சியை கட்டி எழுப்பவேண்டும். இது உலக சோசலிசப் புரட்சியின் கட்சியாக நான்காம் அகிலத்தையும் அதனது ஜெர்மன் பிரிவாக சோசலிச தொழிலாளர் கழகத்தை கட்டுவதாகும்.

இதுதான் இனவாதத்திற்கும், போர் அபாயத்திற்கும் எதிராக வெற்றிகரமான முறையில் முன்னேறுவதற்கான தீர்மானகரமான வழியாகும். முளைவிட்டுக் கொண்டிருக்கும் பாசிசத்தின் வேரில் தாக்குதல் நடத்த வேண்டும், முதலாளித்துவ அமைப்பு முறைதான் இந்த வேர். இதை தவிர்த்துப மிகவும் நல்லெண்ணம் கொண்ட எதிர்ப்புக் கூட ஒருவித பயனற்றதாகும்.

"பாசிசவாதிகளை எங்கே காண்கின்றீர்களோ, அங்கேயே தாக்கு " என்ற குறிக்கோளின்படி பொலிஸ்காரருடனும், மொட்டந்தலையரோடும் (Skinheads) கைகலப்பிற்க்கு போகும் அராஜகவாதிகளினதும், Autonomen குழுவினதும் அரசியலைசோசலிச தொழிலாளர் கழகம் (BSA) நிராகரிக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த முறை தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டி, அரசியல்கல்வி புகட்ட வேண்டிய கட்டாயத்தை நிராகரிப்பதுடன் அரசஇயந்திரத்தை பலப்படுத்துவதற்கான சாக்கு போக்குகளையும் உருவாக்கி கொடுக்கின்றது.

## ஸ்ராலினிசத்தின் ஐந்தொகை

கிழக்குஜெர்மன் குடியரசின் முடிவிலிருந்தும், சோவியத்யூனியனின் உடைவிலிருந்தும் ஆரம்பித்த சோசலிசம் தோல்வியடைந்து விட்டது முதலாளித்துவ அமைப்பு முறைக்கு மாற்று வழி இல்லை என்ற பிரச்சாரம் ஒரு முடிவிற்கு வரவில்லை. ஆனால் முதலாளித்துவ அமைப்பு பமுறையானது ஒரு திசை தெரியாத நெருக்கடிக்குள் தாண்டு போவது தினத்திற்கு தினம் வெளிப்படையாகின்றது.

1930களிற்கு பின்னர் உலகப்பொருளாதாரம் ஒரு ஆழமான பின்னடைவிற்குள் சென்றுள்ளது. இது ஐக்கிய அமெரிக்காவிலிருந்து, ஜப்பான், பெரிய பிரித்தானியா, இத்தாலி, சுவிடன், ஜெர்மனி என்று ஒரு நாடு கூட தவிர்க்கப்பட முடியாத வகையில் உலகரீதியாக விரிடைந்துள்ளது. டாயிமிலர்பென்ஸ் (Daimler Benz) நிறுவனத்தின் தலைவர் எட்சார்ட் ரொயிற்றர் (Edzard Reuter) " இதனை வழமையான தற்காலிகமான பின்னடைவு அல்ல ." இதற்கு மாறாக "இந்த நோயானது உலகத்தினை இனிவரும்முப்பது அல்லது ஐம்பது வருடகாலங்களுக்கு பீடிக்கும் " என்கின்றார்.

கிழக்கு ஜெர்மன் குடியரசினதும், சோவியத்யூனியனினதும் வீழ்ச்சியினைத் தொடர்ந்து போர், அடக்குமுறை, ஏழ்மை இலலாமல் ஒரு புதிய உலக ஒழுங்கினை முன்கூட்டியே பிரதட்டமடித்த காலம் கடந்து விட்டது. இந்த மனக்கோட்டை பரவலாக உடைந்து கொட்டுண்டதை ஸ்பீகல் (Der Spiegel) பத்திரிகை பின்வருமாறு கூறுகின்றது:

"40 வருடகால கிழக்கு, மேற்கு முரண்பாடுகளின் முடிவானது புதிய சந்தைகளிலும்,புதிய உற்பத்தியாளர்களுடனும் இணைந்து செயற்படுவதற்கான ஒரு புதிய சகாப்தத்தை குறிக்கின்றதென்று கருதப்பட்டது. ஆனால் ஆயுதக்குறைப்பு மூலம் அபிவிருத்தி அடையலாம் என்ற நம்பிக்கைகள் ஒரு குறுகிய காலக்கெடுவிற்குள் கரைந்து விட்டது. கிழக்கு முழுக்குழப்பத்திலும், போரிலும் முழுமையாக மூழ்கின்றது, தெற்கில் பட்டினியும், மதவெறியும்ஆட்சி செய்கின்றது.மேற்கில் அமைப்புமுறைகளின் குளிர்கால யுத்தத்தின் வெற்றிக்கு பின்னர் என்ன என்பது தெரியாமல் இருக்கின்றது."

நான்காம் அகிலம் இந்த அபிவிருத்திகளை நீண்டகாலத்திற்கு முன்னரேஆய்வு செய்திருந்தது, சோவியத்யூனியனிலும், கிழக்கு ஜெர்மன் குடியரசும் சோசலிசமாக இருந்ததால் தோல்வியடையவில்லை, இதற்கு மாறாக ஆட்சி செய்த ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினால் மார்க்சிசம் பல பத்து வருடங்களாக அடக்கியொடுக்கப்பட்டு உலகப் புரட்சிக்கான பாதை தடை செய்யப்பட்டதினால் அவை ஒரு முட்டுச்சந்திக்குள் தள்ளப்பட்டன. பாசிசத்தின் வளர்ச்சியும் மூன்றாவது உலகப்போருக்கான ஆபத்தும் தான் இன்று தொழிலாளவர்க்கம் இதற்காக கொடுக்க வேண்டிய விலையாகும்.

ஸ்டாலின் " தனிநாட்டுச்சோசலிசம் " என்ற சித்தாந்தத்தை 1924 லேயே



முன்வைத்திருந்தார்.இது சர்வதேசமட்டத்தில் மட்டும் தான் சாத்தியமாகும் என்ற மார்க்சிச நிலைப்பாட்டிற்கு முற்று முழுதாக முரண்பாடாக இருந்தது. இந்த சித்தாந்தம் ஒக்டோபர் வெற்றிகளை தங்களது சலுகைகளுக்கான அடித்தளமாக்கி வளர்ச்சியடைந்து வந்த அதிகாரத்துவத்தின் நலன்களைப் பிரதிபலித்ததுடன் ஒவ்வொரு புரட்சிகர எழுச்சிகளையும் அதிகாரத்துவத்தின் நலன்களுக்கு எதிரானதென கணிப்பெடுத்தது.

முதலாவது உலக யுத்தத்தின் முடிவில் இருந்ததைப் போன்று இரண்டாவது உலகயுத்தத்தின் முடிவிலும் இருந்த தொழிலாளவர்க்கத்தின் புரட்சிகர எழுச்சிகளை கருவறுப்பதற்காக தனது அனைத்துஅதிகாரத்தினையும் ஸ்டாலினிச அதிகாரத்துவமானது முடுக்கிவிட்டது. இத்தாலியிலும், பிரான்சிலும் பாசிச எதிர்ப்பு போராட்டத்தினை நிராயுதபாணியாக்கி புதிதாக உருவாக்கிய முதலாளித்துவ அரசுகளுக்கு ஆதரவளித்தது.

கிழக்கு ஐரோப்பாவில் மொஸ்கோவை முன்மாதிரியாக்கிய சர்வாதிகாரத்தை ஸ்தாபித்தது. இதன் போது மேற்கொள்ளப்பட்ட தேசியமயமாக்கல்கள் ஸ்டாலினிசத்தின் எதிர்ப்புரட்சிக் குணாம்சத்தில் மாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை.இந்த தேசியமயமாக்கல்கள் தொழிலாளவர்க்கத்தின் சோசலிசஎழுச்சிகளின் விளைவுகளல்ல மாறாக அதிகாரத்துவத்தின் சுயபாதுகாப்பிற்கே சேவை செய்தன.

ஜெர்மன் ஜனநாயகக்குடியரசு படுபிற்போக்குத்தனமான தேசியவாத சித்தாந்தங்களின் விதைநிலம் என்பது தற்போது மிகவும் தெளிவாகின்றது. அதிகாரத்துவம் ஞாயிற்றுக்கிழமை பிரசங்கங்களில் " சர்வதேச ஐக்கியம் " பற்றிப் பேசும் அதேநேரத்தில் நாட்டு மக்கள் நடைமுறையில் வெளிநாட்டுகாரர்களுடன் ஏதாவது தொடர்பு ஏற்படுத்துவதை அனுமதிக்கவில்லை. இந்த வகையில் அதிகாரத்துவம் உருவாக்கி விட்ட வெளிநாட்டுக்காரர்களை வெறுக்கும் மனோநிலையானது சாதாரணமாக ஒருவரால் மிகவும் தனிமைப்பட்ட பின்தங்கிய விவசாயிகள் கிராமமொன்றில் மட்டும் தான் அவதானிக்க முடியும்.

"சோசலிச சகோதர நாடுகள் " ஆன வியட்நாம், மொசம்பிக், கியூபா ஆகிய நாடுகளிலிருந்து வந்த " தொழிலாள விருந்தினர் " தான் இன்று இனவாத தாக்குதலின் பிரதான இலக்காகும். இந்த தொழிலாளர்கள் ஏற்கனவே SED ( ஜெர்மன் ஐக்கிய சோசலிச கட்சி) ஆட்சியில் கீழ்த்தரமான அடிமைகள் போல் மனிததன்மைக்கு அப்பாற்பட்ட நிலைமைகளில் ஜெர்மன் மக்களிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டு விடுதிகளில் அடைக்கப்பட்டிருந்தனர்.

எல்லாவற்றிலும் பார்க்க இராணுவத்தில் ஜெர்மன் பாரம்பரியத்தை SED பராமரித்து பாதுகாத்தது. இது இராணுவத்தில் மட்டுமல்ல அனைத்திலும் மேற்கொள்ளப்பட்டது. Republikaner பாசிசக்கட்சி வெற்றிகரமாக அங்கத்தவர்களை முன்னாள் NVA (தேசிய மக்கள் படை) இலிருந்து திரட்ட முடிந்ததும், அதுபோல இன்று அரசியல் அகதிகளுக்கெதிராக கடுமையாகக் குலைக்கும் CDU வின் பிரதிநிதிகள் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை விசுவாசமாகப் பாதுகாத்த கிழக்கு ஜெர்மன் குடியரசின் பழைய CDU வின் அங்கத்தவர்கள் ஆக இருக்கின்றதும் தற்செயலான சம்பவமல்ல.அத்துடன் SED



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியிலிருந்து உருவாகிய PDS (ஜனநாயக சோசலிச கட்சி) இன்று மட்டும் நிலைதவறாமல் ஸ்டாலினிசத்தின் தேசியவாத அச்சை விட்டு விலகவில்லை.

பாசிசத்திற்கும், முதலாளித்துவத்திற்கு இடையில் இணைப்பு இருக்கின்றது என்பதை நிராகரிக்கும் இவர்கள் " பரந்தளவிலான பாசிச எதிர்ப்பு " என்ற மூடுதிரையின் கீழ் தேசிய வாதத்திற்கு கண்ணியமான வடிவம் கொடுக்க முயல்கின்றனர். 10.7.92 திகதியிட்ட PDS கட்சியின் " பத்திரிகைசேவையில் " எழுதுகின்றனர் : "பாசிசஎதிர்ப்பு இடது சாரித்தனமானது, பாசிசஎதிர்ப்பு முதலாளித்துவத்திற்கு எதிரானது என்ற நிலைப்பாடானது தொடக்கத்திலிருந்தே பலரை ஒதுங்கிப் போகப் பண்ணுகின்றது எனவே இது பயன்படக்கூடியது ஒன்றில்லை. சில பாசிச எதிர்ப்பாளர்களும், சில இடதுசாரிகளும் ஜெர்மன்தேசம், தந்தைநாடு என்ற விடயங்களை அணுகப்பயப்படும் தேசவிரோத நிலைப்பாடு வலதுசாரி தீவிரவாதத்திற்கெதிரான கருத்துப்பரிமாறலை பலவீனப்படுத்தக்கூடும்.

சோவியத்யூனியனினதும், DDR இனதும் உடைவு சோசலிசத்தின் தோல்வி அல்ல, பதிலாக ஸ்டாலினிசத்தின் வங்குரோத்தினை நிறுவிக் காட்டியுள்ளது. என்ன இறுதியில் இந்த ஸ்டாலினிச ஆட்சிகளின் கழுத்தை முறித்ததென்றால் தேசிய மட்டத்தில் தனிமைப்பட்ட பொருளாதாரத்தினால் சர்வதேசரீதியாக வளர்ச்சியடைந்த தொழிற்பிரிவினையுடன் ஈடுகொடுக்க முடியாத தன்மையாகும்.

"முதலாளித்துவ சமுதாயத்தின் உற்பத்திச்சக்திகள் நீண்டகாலத்திற்கு முன்னரே தேசிய எல்லைகளைக் கடந்து வளர்ச்சியடைந்து விட்டன " என்று ரொக்சி 1930 இலேயே ஸ்டாலினிசத்திற்கு கெதிராக எழுதிய மறுப்பில் தொடர்கின்றார், "ஏகாதிபத்திய யுத்தம் இந்த உண்மையின் வெளிப்பாடாகும். சோசலிசசமுதாய அமைப்பு முறையானது ஒப்பீட்டு ரீதியில் முதலாளித்துவ சமுதாயஅமைப்பு முறையிலும் உயர்ந்த கட்ட தொழில்நுட்ப உற்பத்தி வளர்ச்சியைஅடைய வேண்டும்.தேசியரீதியாகத் தனிமைப்பட்ட ஒரு சோசலிச சமுதாயத்தை கட்டி எழுப்பும் முயற்சி தற்காலிகமான அனைத்து வெற்றிகளின் மத்தியிலும் உற்பத்திசக்திகளை முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் கூடப் பின்தங்கிய நிலைக்கு போவதையே குறிக்கும். உலகஐக்கியத்தின் ஒரு பகுதியைப் பிரநிதிப்படுத்தும் ஒரு நாட்டின் பூகோள, கலாச்சார, வரலாற்று நிலைமைகளின் வளர்ச்சிகளை கணக்கில் எடுத்து கொள்ளாமல் பொருளாதாரத்தின் அனைத்து பிரிவுகளிலும் சுயமாகவே முடிவான விகிதாசாரத்தை தேசிய எல்லைக்குள் நிறைவேற்ற நினைப்பது ஒரு பிற்போக்குதனமான கற்பனையை பின் தொடர்வதாகும்". (நிரந்தரப்புரட்சி ஜெர்மன் பதிப்பு, பக்கம்9 )

நீண்டகாலமாக ஸ்டாலினிச அதிகாரத்துவம் முதலாளித்துவத்தை பொருளாதார ரீதியில் எட்டிப்பிடிப்பதுடன், மேலேறியும் செல்ல முடியும் என்று கூறி வந்தது. ஆனால் 1970 களிலும் 1980 களிலும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் பார்க்க பாரியளவில் பின்தங்கியது. உலகளவிலான சர்வதேசமயப்படுத்தபட்ட உற்பத்தியும் விசேடமாக மைக்ரோஎலக்ரோனிக் துறையில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றங்களும் இதற்கான காரணமாகியது.

உலகச்சந்தையின் முக்கியமான வளங்களிலிருந்து தனிமைப்பட்டு சர்வதேசரீதியான தொழில் வளர்ச்சிக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியாமல் ஸ்டாலினிச அதிகாரத்துவம் வங்குரோத்தடைந்தது. கிழக்குஐரோப்பவினதும், சோவியத்யூனியனினதும் பொருளாதாரம் ஒரு ஆழமான தேக்க நிலைக்குள் வீழ்ச்சியடைந்தது .



இந்த நெருக்கடிக்கு போலந்தின் தொழிலாளவர்க்கம் 1980ல் சொலிடாற்றி இயக்கத்தை கட்டி எழுப்புவதன் மூலம் பதில் அளித்தது. அத்துடன் சோவியத் யூனியனிலும் அதிகாரத்துவத்திற்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் எழுச்சிக்கான ஆரம்பங்கள் சாத்தியமாகக்கூடிய நிலையில் இருந்தது. இந்த அபாயத்தை உணர்ந்த அதிகாரத்துவம் சோசலிசத்துடன் சொல்லளவிலிருந்த தொடர்பையும் முறித்துக்கொண்டு பகிரங்கமாக சந்தைப் பொருளாதாரத்தை தனது கொடியில் எழுதிக்கொண்டு முதலாளித்துவ அறிமுகத்திற்கு தலைமை தாங்கியது. இதில் தான் கோர்பார்சேவின் பெரிஸ்ரோயிரிக்காவின் அர்த்தம் அடங்கியிருந்தது.

இதன் விளைவுகள் ஒப்பிட்டுப் பார்க்கமுடியாத சமூகப் போரழிவுகளாகும். ஸ்டாலினிச, முதலாளித்துவ சித்தாந்தவாதிகளால் ஒரேமாதிரியாக சத்தியம் செய்து வாக்குக்கொடுத்த ஆரோக்கியமான விளைவுகள் வளர்ச்சியடைவதற்கு பதிலாக சந்தை முறையை அறிமுகபடுத்தியது தொழில் உற்பத்தியின் முழுமையான முடமாக்கலுக்கு வழிதிறந்துள்ளது. இந்த விளைவுகள் சோசலிசத்தின்சொத்து என்று கணக்குக்கொடுப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கிலும் வளர்ச்சியடையும் இதே மாதிரியான அபிவிருத்திகளால் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

பெரிய பிரித்தானியாவில் தினசரி 3500 பேர் வேலையை இழக்கின்றனர். ஜெர்மனியில் மேற்க்கில் மட்டும் இந்த வருடத்தில் இயந்திரத்தொழில்துறையில் மட்டும் 80,000 இயந்திர உபகரணங்களை உருவாக்கும் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். மின்ணணுவியல் துறையில் 10,000 தொழிலிடங்களும் உருக்குத்தொழிலில் 20,000 தொழிலி டங்களும் அழிக்கப்பட்டு இருக்கின்றன. மோட்டார்வாகன தொழிலில் இனிவரும் வருடங்களில் 100,000 இலிருந்து 200,000 வரையிலான வேலையிடங்கள் அழிக்கப்படவுள்ளன.

முதலாளித்துவத்தினாலும் அதனால் வளர்த்தெடுக்கப்பட்ட உற்பத்திச் சக்திகளை கட்டுப்படுத்த முடியாது. முதலாளித்துவவாதிகள் கூட ஸ்டாலினிச அதிகாரத்துவத்தைப் போலவே அவர்களது அகங்காரமான நலன்களுடன் சர்வதேசதொழில் பரிவர்த்தனையின் தேவைகளை இணக்கத்திற்கு கொண்டுவர ஒன்றுமே செய்ய முடியாத நிலையிலிருக்கின்றனர்.

## இராணுவவாதத்தின் வளர்ச்சி.

ஏற்கனேவேயிருக்கும் கட்சிகளின் கூர்மையான வலதுசாரித்திருப்பமும், தீவிரவலதுசாரிப் போக்குகளின் வளர்ச்சியும் அத்துடன் இராணுவ நடவடிக்கைளுக்காக தீவிரமடைந்த தயார்நிலையும் தனிய ஜெர்மனியில் மட்டும் தோன்றியதொன்றல்ல நடைமுறையில் இதனை எல்லா நாடுகளிலும் அவதானிக்க முடியும் இது முதலாளித்துவ சமுதாயம் ஒரு திசை தெரியாத முட்டுச்சந்திக்குள் சென்றுவிட்டதன் தெளிவான தோற்றப்பாடுகளாகும். வெளிநாட்டுகாரருக்கெதிரான வெறுப்பும், இராணுவவாதமும் முழு முதலாளித்துவ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமுதாய அமைப்பு முறையினதும் நாற்றமெடுத்த வங்குரோத்துதன்மையினது விளைவுகளாகும்.

இந்த தோற்றப்பாடுகளுக்கு பின்னால் இருக்கும் உந்து சக்தியானது தனிச்சொத்துடமைக்கும், உற்பத்திச் சக்திகளுக்குமிடையில்; அதே மாதிரி முதலாளித்துவ சமுதாய அமைப்பு முறை கட்டியெழுபப்பட்ட தேசிய அரசு அமைப்பு முறைக்கும் , நவீன உற்பத்திச்சக்திகளின் சர்வதேச தன்மைக்குமிடையில் இருக்கும் சமரசம் செய்து வைக்க முடியாத முரண்பாடுகளாகும்.

நூறு கோடிக்கணக்கான பணத்தினை தினசரி இந்தப்பூகோளத்தில் லாபவேட்டைக்காக பிரட்டியெடுக்கும் பாரிய நிறுவனங்கள், வங்கிகள், காப்புறுதிநிறுவனங்கள் சுருங்கிக் கொண்டு வரும் சந்தைக்கான போட்டியில் கடுமையான யுத்தத்தினை நடாத்துகின்றனர்.

பல பத்துவருடங்களாக உலக வர்த்தகத்தை ஒழுங்குபடுத்திய வரியிலும் வர்த்தகத்திலும் பொதுஉடன்பாடு (GATT) போன்ற சர்வதேச ஒப்பந்தங்கள் உடைந்து கொட்டுண்ணுகின்றன. உலகம் மீண்டும் ஐக்கியஅமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி தலைமை தாங்கப்படும் வர்த்தகப்போட்டியாளர்களின் பிரிவுகளாக உருக்குலைகின்றது.

ஏற்கனவே இந்த நூற்றுண்டில் உலகை மறுபங்கீடு போடுவதற்கான ஏகாதிபத்திய சக்திகளின் சண்டையானது மனிதசமுதாயத்தை இரண்டு தடவைகள் உலக யுத்தத்தினுள் தள்ளியது. இரண்டு தடவைகளிலும் ஜெர்மன் ஏகாதிபத்தியமே போரைத் தொடக்கியது. மிகவும் சக்திவாய்ந்த பொருளாதாரத்தை வைத்திருந்த ஜெர்மன் ஏகாதிபத்தியமானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தைப் போல ஒரு உள்நாட்டு சந்தையோ அல்லது பிரித்தானியஏகாதிபத்தியத்தை போன்று ஒரு பரந்த காலனித்துவ அரசையோ கொண்டிருக்கவில்லை. ஏனைய ஏகாதிபத்திய நாடுகளிலும் பார்க்க " வாழும் பிரதேசத்தை " தேடவேண்டியிருந்தது.

இரண்டாவது உலகயுத்தத்தின் இடிபாடுகளின் மத்தியில் ஒரு புதிய சர்வதேச சமநிலை உருவாக்கப்பட்டது. இந்த சமநிலை ஜெர்மன் முதலாளித்துவத்தை பல பத்து வருடங்களாக " சமாதானமான " வழியில்தனது நலன்களை அனுசரிக்கவைத்தது. இன்று இந்தக் காலம்மாறிவிட்டது. ஜெர்மன் முதலாளித்துவம் 1914 இலும் 1939 இலும் முகம்கொடுத்த அதே பிரச்சனைகளுக்கு முன்னால் இன்று மீண்டும் வந்திருக்கின்றது.

1991 ன் முற்பகுதியில் வளைகுடா யுத்தம் ஆரம்பித்ததின் பின்னர் ஜெர்மன் அரசாங்கமானது ஜெர்மன் இராணுவத்தினை சர்வதேச சண்டைகளில் ஈடுபடுத்துவதற்கான தயாரிப்புக்களில் திட்டமிட்டரீதியில் முன்னேறியிருக்கின்றது. தான் பாரிய வர்த்தக நலன்களை வைத்திருந்த ஈராக்கின் மீது அமெரிக்கா பாய்ந்ததை அது இரண்டும் கெட்டான உணர்வுகளோடேயே அவதானித்தது. இதிலிருந்து எதிர்காலத்தில் தனது உலக ரீதியான நலன்களை பாதுகாப்பதற்க்கு இராணுவரீதியான வலியுறுத்தலை வழங்கும் முடிவிற்கு வந்தது.

இரண்டாவது உலகயுத்தத்தின் விளைவுகளால் அரசியல் அமைப்பு சட்டத்தில் போடப்பட்டிருந்த இராணுவ நடவடிக்கைகளுக்கான தடைவிதிகளில் ஒட்டை போடுவதற்க்கு ஒரு சந்தர்ப்பத்தையும்இது தவறவிடவில்லை. பாரசீக வளைகுடாவில். கண்ணிவெடி அகற்றுதல், துருக்கி, ஈராக் எல்லையில் விமானப்படைத் தலையீடு,கம்போடியாவில் சுகாதாரசேவையில் ஈடுபடுதல்,யூகோஸ்லாவிய



அட்றியாக் கடலில் காவல் காத்தல் போன்றவை இராணுவ நடவடிக்கைகளை ஒத்திகை பார்த்த சில கட்டங்களாகும்.

ஜெர்மன், பிரான்சு கூட்டுப்படை, மேற்க்கு ஐரோப்பிய சங்கத்தின் (WEU) தலைமைக்கு கீழான இராணுவக்கட்டளை வடிவங்கள் என்ற புதிய அமைப்புகள் எதிர்காலத்தில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் நேட்டோவிலிருந்து ( NATO) சுயாதீனமாக நடவடிக்கை எடுக்கும் நோக்கில் உருவாக்கப்படுகின்றன.

வெளிநாட்டுமந்திரி கிங்கெல் (Kinkel) ஐக்கியநாடுகளின் பாதுகாப்புச்சபையில் நிரந்தரஇடத்தினை கோரியதன் மூலம் ஜெர்மன்முதலாளித்துவம் அரசியல், பொருளாதார, இராணுவரீதியில் மீண்டும் பெரிய சக்தியாக பங்களிக்கும் விருப்பத்தை உத்தியோகபூர்வமாக பதிவுசெய்துள்ளார்.

பாதுகாப்பு மந்திரிசபையில் ஸ்ரொல்ரென்பேர்க் (Stoltenberg), றுகேயினால்[R ühe] பதிலீடு செய்யப்பட்டார். இவர் வளர்ந்து கொண்டு வரும் இராணுவவாதம் தொடர்பான பாரிய பொதுமக்களின் வெறுப்பை தந்திரோபாய மென்னுணர்வுகளால் தடைசெய்யும் தன்மையை கூடுதலாகக் கொண்டிருக்கின்றார். ஆராட்ச்சி செய்ய வெளிக்கிட்ட அனைத்து இராணுவஅதிகாரிகளுக்கும் வாய்ப்பூட்டு போட்ட Rühe ஜெர்மன்இராணுவத்தை சர்வதேசரீதியில் ஈடுபடுத்துவதற்கு தான் SPD யின் ஒத்துழைப்பு வரை மட்டும்தான் காத்திருக்க வேண்டுமென மீண்டும், மீண்டும் வலியுறுத்தினர். ஆனால் இதற்கான தயாரிப்புக்கள் ஏற்கனவே முன்னிலும் பார்க்கத்தீவிரமாக மேற்கொள்ளப்படுகின்றன .

SPD அவரை ஏமாற்றவில்லை. தற்பொழுது உலகம் முழுவதும் ஜெர்மன் இராணுவத்தை ஈடுபடுத்துவதை சட்டபூர்வமாக்குவதற்கான அரசியல் அமைப்பு சட்டத்தில் மாற்றம் ஏற்ப்படுத்துவதற்கான சம்மதத்தை SPD தெரிவித்துள்ளது.

இது நீல, பச்சை அல்லது வேறு எந்த நிறம் கொண்ட இராணுவ தொப்பிகளுக்கு கீழே நடைபெற வேண்டும்மென்ற இவர்களது முடிவில்லாத விவாதங்கள், இவர்களது கரடிவித்தைக்கதைகளான "சமாதானத்தைப்ாதுகாக்கின்ற ", "சமாதானத்தை நிர்ப்பந்திக்கின்ற " நடவடிக்கைகள் என்பன இறுதியில் பொதுமக்களை ஏமாற்றுவதையே நோக்கமாக கொண்டுள்ளது. எந்தப் போர் வெற்றி பெற்றவர்களின் கட்டளைக்கு பணிந்து " சமாதானத்தை நிர்ப்பந்திக்கும்" நோக்கம் இல்லாதது.

ஏற்கனவே ஜனவரி மாதத்தில் இராணுவமுன்னணித் தலைவர்களும், பாதுகாப்பு மந்திரிசபையின் உயர்ந்த உத்தியோகத்தர்களும் முன்வைத்த மூலோபாய அறிக்கை ஒருவித சந்தேகமின்றி சர்வதேரீதியான ஜெர்மன் இராணுவத்தை ஈடுபடுத்தும் நோக்கத்தை தெளிவுபடுத்தியது. இந்த மூலோபாய அறிக்கை கூறுகின்றது: "ஜெர்மனியின் நலன்களுக்கு பாதகமாகவும் அதனது ஸ்திர நிலைமையைக் குலைக்கும் நோக்கம் கொண்ட அனைத்து முரண்பாடுகளையும் தடைசெய்ய, கட்டுப்படுத்த, முடிவுக்குக்கொண்டுவரவேண்டும் ." , " உலகரீதியான அரசியல், பொருளாதார , இராணுவ, சுற்றுச்சூழல் ஸ்திரத்தை உருவாக்குவதும், பாதுகாப்பதும் " அத்துடன் " சுதந்திரமான உலக வர்த்தகத்தை தொடர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பேணுவதும் முக்கியமான மூலப்பொருட்களை அடைவதற்கான வழிகளைப் பாதுகாத்தலும். " வேறு சொற்களில் : ஜெர்மன் மூலதனத்தின் மூலோபாய, பொருளாதார, அரசியல் நலன்களை உலக ரீதியில் பாதுகாப்பது என்பதாகும்.

## யூகோஸ்லாவியப் போர்

ஒவ்வொரு மாலைப்பொழுதும் தொலைக்காட்சிச் செய்தியில் ஒளிபரப்பாகும் சரஜோவொநகர் (Sarajewo) இலிருந்துவரும் அதிர்ச்சி தரும் படங்கள் எல்லாவற்றிலும் பார்க்க ஜெர்மன்இராணுவத்தை சர்வதேசரீதியில் ஈடுபடுத்துவதை நியாயப்படுத்துவதற்கே பயன்படுத்தபடுகின்றது. யூகோஸ்லாவியாவில் " சமாதான " இராணுவநடவடிக்கையில் ஈடுபடவேண்டுமென்ற கூக்குரல் மிகவும் சத்தமாகக் கேட்பது SPD, Grünen, taz பத்திரிகையின் ஆசிரியர்குழு ஆகிவற்றிலிருக்கும் முன்னுள் அமைதிவாதிகளின் கூடாரத்திலிருந்துதான்.
இவர்கள் ஒருவரும் இன்றுவரை விளங்கப்படுத்தவில்லை எந்த அடித்தளத்தில் இந்த நிர்ப்பந்திக்கப்பட்ட சமாதானம் ஏற்ப்படுத்தப்பட வேண்டும் எனபதை. எப்படி இந்த அதிர்ச்சிதரும் இரத்தகளரியை கட்டவிழ்த்து விட்ட பிரச்சனைகளை முடிவுக்கு கொண்டு வரமுடியும் என்பதை விட்டு விட்டு இவர்கள் அனைவரும் இனவாத அடிப்படையில் ஏன் " சேர்பியர்கள் " கூடாதவர்கள்" குரோசியரும் ", " பொஸ்னியரும் " ஏன் நல்வவர்கள் என ஆராய்கின்றுர்கள்.
குரோசியர்களின் பக்கச்சார்பான போரில் தலையிடவேண்டும் என்பதிலிருந்துதான் இந்த " சமாதான " நடவடிக்கை வேண்டுமென்ற கோரிக்கை ஆரம்பமாகின்றது. கிட்லரது ஆட்சியின் பாரம்பரியத்தோடு நேடியாக இணையும் இது ஜெர்மன் அரசாங்கத்தின் நீண்டநாள் இலக்காகும்.
உன்மையில் சேர்பிய ,குரோசிய, பொஸ்னிய தேசியவாதிகளுக்கிடையில் ஒரு வித்தியாசமுமில்லை. சாதாரண மக்களை துன்பப்படுத்தும் காட்டுமிராண்டித்தனமான கொடுமையான நடவடிக்கைகளில் இவர்கள் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களல்ல. பொஸ்னியாவில் போர் வெடிப்பதற்கு முன்னரே இந்தநாட்டை எப்படி பங்கிடுவது என்பதில் குரோசிய,சேர்பிய அரசாங்கங்கள் பேசிப்பறைந்திந்திருந்தன. சேர்பியர் பக்கத்திலிருந்து அழுத்தம் ஒரு சிறிது குறைந்தவுடன் இந்த உடன்பாடுகளை தங்களது பொஸ்னிய " நேசநாட்டுக்கு " எதிராக நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு போதும் தயங்கவில்லை என்பதை குரோசிய துருப்புக்கள் பல தடவை நிறுவி காட்டியிருக்கின்றன.
இங்கே எழுப்பபட வேண்டிய கேள்வி பின்வருமாறு : பலபத்து வருடங்களாக சமாதானமாக ஒன்றிணைந்து வாழ்ந்த மக்கள்தொகையினரை எப்படி தேசியவாதக்குழுக்களால் பயமுறுத்தவும் வேட்டையாடவும் முடிந்தது.
இதற்கான விடை பின்வருமாறு : இது முதலாளித்துவ அறிமுகத்தினதும், தேசிய, இனஅடிப்படைகளில் எல்லைகள் கீறி நாட்டை துண்டுபோடுவதனுலும் ஏற்ப்பட்ட தவிர்க்க முடியாத விளைவுகளாகும். இந்த நடவடிக்கையானது ஜெர்மன் அரசாங்கத்தினுல் திட்டமிட்ட ரீதியில் ஊக்குவிக்கப்பட்டு, ஆதரவளிக்கப்பட்டு வருகின்றது.
நாற்பது வருடகாலங்களுக்கு மேலாக சேர்பியர், குரோசியர் , முஸ்லிம்கள்



இன்னும் பல தேசிய இனங்கள் சமாதானமாக இணைந்து வாழ்ந்தனர். இதற்கான அடித்தளம் ஜெர்மன் ஆக்கிரமிப்பு ஆட்சியாளர்களுக்கும் , அவர்களது உள்நாட்டு கூட்டாளிகளுக்கும் எதிரான விடுதலை போரில் வெற்றியடைந்ததால் உருவாக்கப்பட்டதுடன், பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேசியமயமாக்கலால் உறுதியாக்கப்பட்டது.

சர்வதேசநாணயநிதியத்தின் (IMF) கட்டளைக்கிணங்க ஆட்சி செய்த அதிகாரத்துவத்தினுல் அறிமுகம் செய்யப்பட்ட " சந்தையும் " தனியார்மயப்படுத்தலும் நடைமுறைப்படுத்தப்படுகையில் பழைய தேசிய முரண்பாடுகளும் மீண்டும் தலையை தூக்கின. இந்த நோக்கில் ஏனய கிழக்கு ஐரோப்பிய நாடுகளோ, சோவியத்யூனியனே, யூகோஸ்லாவியாவிலிருந்து வித்தியாசப்படவில்லை. தனியார்சொத்துடமையும், சந்தையையும் நோக்கிய ஸ்டாலினிச அதிகாரிகளினதும், குட்டிமுதலாளித்துவ தீவிரவாதிகளினதும் திருப்பமானது அவர்களை, தங்களை செல்வந்தர்களாக்கவும், பிடிக்ககூடியாளவிற்கான பெரியபிரதேசங்களை தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவுமான ஒரு வெறித்தனமான உந்துதலை இவர்கள் மத்தியில் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றது.
"சுத்தமானஇனப் " பிரதேசத்தை உருவாக்குவது என்ற பெயரில் மக்களின் பெரும்பகுதியினரை விரட்டியடிக்கும் வடிவத்தினை இது யூகோஸ்லாவியாவில் எடுத்திருக்கின்றது. இந்தப்போரில் "தேசியசுயநிர்ணய உரிமை " என்பது பற்றிய கேள்வி ஒரு பக்கத்திலும் இல்லை மாருக முன்னுள் யூகோஸ்லாவியாவிய அரசில் கொள்ளையடித்ததை எப்படி முதலாளித்துவ போட்டியாளர் குழுக்களிடையே பங்கிடுவதுதான் கேள்வியாக உள்ளது.
இந்தக் கொள்ளையில் பலப்பரீட்சை பார்ப்பதன் மூலம் ஏகாதிபத்திய சக்திகள் இதனை ஊக்குவிக்கின்றனர். விசேடமாக ஜெர்மன்அரசாங்கமானது விழுந்தடித்துக் கொண்டு குரோசியாவை அங்கிகரித்ததன் மூலம் இதில் முன்னேறியிருக்கின்றது. இரண்டாவது உலக யுத்தத்திற்கு பின்னர் முதல்தடவையாக பால்க்கன் பிரதேசத்தில் தனது இராணுவ பலத்தினை விளம்பரப்படுத்துவதற்க்கான சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கின்றது .
அமெரிக்க, பிரித்தானிய, பிரான்சு அரசாங்கங்கள் பால்கன் பிரதேசத்தில் வைத்திருக்கும் அவர்களது சொந்த நலன்களோடு ஜெர்மன் முதலாளித்துவத்தின் இம்முயற்சிகள் மோதலை தோற்றுவிக்கின்றது. அதனுல்தான் தனது சொந்தத்துருப்புக்களுடன் பிரசன்னமாவதற்கு துடியாய் துடிக்கின்றது. முதலாவது உலகயுத்தத்தினை கட்டவிழ்த்து விட்டதற்கு காரணமாயிருந்த பால்க்கன் முரண்பாடானது மீண்டும் புதிதாக ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையில் கூர்மை அடைகின்றது.
ஐக்கியநாடுகள் சபையினதோ அல்லது மேற்க்கு ஐரோப்பிய சங்கத்தினதோ அல்லது வேறு ஏதாவது அமைப்பினதோ கட்டளையின் கீழான இராணுவத் தலையீடானது பால்கன் பிரதேசத்தை துண்டுபோட்டு தேசியவாதிகளின் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே வழிசெய்யும். இதன்மூலம் இந்தப்போருக்கான காரணங்களை முடிவில்லாமல் நீட்டுவிக்கும். இந்த மாதிரியான இராணுவத்தலையீட்டுக்கு கூக்குரலிடுவது நெருப்புகொழுத்துவோரை,நெருப்புஅணைப்பவர்கள் என்று அழைப்பது போலாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளவர்க்கம் தனது கைவேலையை இந்தப் போர்மூட்டுவோர்கள் மீது காட்டுவதன் மூலம் மட்டும்தான் இந்தப் போரை நிறுத்த முடியும். சேர்பிய, குரோசிய, சுலவேனிய மற்றும் ஏனைய இனங்களைச்சேர்ந்த அனைத்து தொழிலாளர்களும் தேசியவாதிகளுக்கும் இனப்படுகொலை வேட்டைக்காரருக்கும் எதிராக கட்டாயமாக ஒன்றிணைய வேண்டும். தேசியவாத முட்டுச்சந்தியிலிருந்து வெளியேறுவதற்கான ஒரேவழி பால்கன் சோசலிசஒன்றியத்தை

நிர்மாணிப்பதைத்தவிர வேறு இல்லை.

## என்ன செய்ய வேண்டும்

இனவாதத்திற்கும், போர் அபாயத்திற்குமெதிரான போராட்டத்தில், எல்லாவற்றிலும் முதன்மையாக தொழிலாளவர்க்கத்தின் புரட்சிகர அரசியல் இயக்கம் முக்கியமானதாகும். இப்படியான அரசியல் இயக்கம் ஒன்றிற்கு உந்துசக்தி வழங்குவதற்காக சோசலிசத்தொழிலாளர் கழகம் (BSA) 1992 டிசம்பர் மாதம் 5ம் 6ம் திகதிகளில் இரண்டு நாள் மகாநாடு ஒன்றிற்கு அழைப்புவிடுகின்றது.நாளாந்தம் பத்திரிகைத்தொடர்புச் சாதனங்களாலும், அரசாங்கத்தினுலும், SPD, தொழிற்சங்களினுலும் பரப்பப்படும் பிற்போக்குத்தனமான தேசியவாதத்திற்கு எதிரான ஒரு தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்வதே இந்த மகாநாட்டின் இலக்காகும். இதனது மத்தியபுள்ளியாக சர்வதேசதொழிலாள வர்க்கத்தின் ஐக்கியத்திற்கான போரட்டாம் அமைகின்றது . மகாநாட்டில் பெரியபிரித்தானியாவிலிருந்தும், இன்னும் பல நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் பங்கெடுத்து கொள்வார்கள்.
இதன் மூலம் வித்தியாசமான நாடுகளின் தொழிலாளர்களைதுண்டாடி வைத்திருக்கும் தேசியவாதத்திற்கு படுகுழி தோண்டுவதற்கு வழி சமைக்கப்படும் . உற்பத்தியின் சர்வதேசதன்மை, தொழிலாளர்கள் எல்லா இடங்களிலும் ஒரே நிறுவனங்களினதும், வங்கிகளினதும் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கின்றுர்கள் என்ற உண்மை தொழிலாள வர்க்கத்தை சர்வதேசரீதியாக ஒன்று கூட்டி இணைத்திருக்கின்றது. ஆனுல் இந்த புறநிலை போக்கு வளர்ந்துவரும் இனவெறிப்போக்குகளால் மறைக்கப்பட்டிருக்கின்றது.
ஜெர்மன் நவநாசிகளின் அலறலை தொலைகாட்சிப் படங்களில் பார்த்தபோது இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து, போலந்து, ஐக்கிய அமெரிக்கா இன்னும் பல உலக நாடுகளில் தொழிலாளர் மத்தியில் வெளிப்பட்ட நியாயமான அதிதிருப்தியை தந்திரமாகப் பாவித்து இந்த நாடுகளில் ஆளும் வர்க்கமானது இனவெறியை தூண்டிவிட்டுள்ளது. உதாரணத்திற்குபெரிய பிரித்தானியாவில் மூன்று மில்லியன் பேர் வேலை இழப்பதற்கான காரணம் முதலாளித்துவத்தில் இல்லை " ஜெர்மன்காரரில்" தான் இருக்கின்றது என்று கதைவிடப்பட்டுள்ளது. தொழிலாளவர்க்கத்தின் சக்தி வாய்ந்த எதிர் தாக்குதல் ஒன்று மட்டும்தான் இனவெறிக்கும், போர்அபாயத்திற்கும் எதிரான முடிவைக்கட்டும்.
இந்த மகாநாட்டின் அடிப்படை பின்வரும் வேலைத்திட்டத்தினுல் அமைக்கப்படுகின்றது .



* தொழிற்சாலைகள், வேலைத்தலங்கள், பள்ளிக்கூடங்கள், தொழிலாளர் வதிவிடங்களில் பாதுகாப்பு குழுக்களை அமைத்து அகதிகளுடனும், அரசியல்தஞ்சம் கோரியோருடனும் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களது பாதுகாப்பிற்கு பொறுப்பேற்க வேண்டும் !

* வேலையிடங்களையும் ,சம்பளம் மற்றும் ஏனைய உரிமைகளைப்பாதுகாப்பதற்கான போராட்டத்தில் தேசிய எல்லைகளைக்கடந்து கிழக்குஐரோப்பா, சோவியத்யூனியன், மேற்க்குஐரோப்பாவின் ஏனையநாடுகள் அமெரிக்க, ஆசிய, ஆபிரிக்கத் தொழிலாளருடன் இணையவேண்டும் !

* சோசலிசவேலைத்திட்டத்தை நிறைவேற்றும் ஒரு தொழிலாளர் அரசாங்கத்திற்காகப் போராடு !

* முழுப்பொருளாதாரத்தையும் தொழிலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் திட்டமிட்டவகையில் தொழிலாளவர்க்கத்தினதும் ஒடுக்கப்பட்ட மக்களினதும் தேவைகளைப்பூர்த்தி செய்யும் நோக்கில் உலகசோசலிசகுடியரசின் ஒரு பாகமாக ஐக்கிய ஐரோப்பிய சோசலிசக்குடியரசுக்காகப் போராடு !

அனைத்துத் தொழிலாளர்களையும், இளைஞர்களையும் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அறை கூவல் விடுகின்றேம்.

ஜெர்மனியில் வாழும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கும், அகதிகளுக்கும் இந்த மகாநாட்டில் பங்குகொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கின்றேம் .

ஜெர்மன் தொழிலாளவர்க்கத்துடனும், சர்வதேசதொழிலாளவர்க்கத்துடனும் ஐக்கியப்படுவதுதான் முன்னேவதற்கான ஒரே ஒரு வழியாகும்.

வரலாற்றிலிருந்து பாடங்களைப் படியுங்கள், தேசியசோசலிசத்தின் எழுச்சியும், வெற்றியும் மனிதசமுதாயம் முன்னெப்பொழுதும் அனுபவித்திராத பாரிய இரத்த வெள்ளத்தை உருவாக்கியது. 100மில்லியன் மனிதர்கள்சித்திரவதை முகாம்களிலும், போர்களங்களிலும், குண்டுகளால் அழிந்த நகரங்களிலும் தங்கள் உயிரை இழந்தனர். அன்று தொழிலாளவர்க்கத்தினுல் மட்டும் தான் பாசிசத்தையும், போரையும் நிறுத்த கூடியதாக இருந்தது.பல தொழிலாளர்கள் அதற்கு தயாரகவும் இருந்தனர் ஆனுல் அவர்கள் சமூக ஜனநாயக, ஸ்டாலினிசத்தலைவர்களல் காட்டிக்கொடுக்கப்பட்டார்கள் . இன்று சமூகஜனநாயகவாதிகள், ஸ்டாலினிஸ்டுக்கள் தொழிற்சங்க தலைவர்களின் பாத்திரத்தைப்பற்றி ஒருவருக்கும் ஒருவித நம்பிக்கையும் இல்லையென்பதில் சந்தேகமில்லை. தொழிலாளவர்க்கத்தின் ஒரு புதிய சாவதேச புரட்சிகரக் கட்சியைக் கட்டுவது தான் இந்தக் கணத்தின் அவசியமும் அவசரமுமான பணியாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மார்க்சிச முன்னோக்கு

புரட்சிக்கம்மியூனிஸ்ட் கழகத்தின் வெளிநாட்டுக்கிளையினால் வெளியிடப்படுகின்றது.



மார்க்சிச முன்னோக்கு

சர்வதேச தொழிலாளவர்க்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரொக்சிய சஞ்சிகை

சோவியத்யூனியனின் முடிவும் சோசலிசத்தின் எதிர்காலமும்

"சிந்தனை" பத்திரிகையின் பப்லோவாத முகமூடி கிழிகின்றது

யூகோசிலாவியாவின் உள்நாட்டுப் போரின் பின்னணியில்

நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினது வெளிநாட்டுக் கிளையின் வெளியீடு

இதழ் 1 இலக்கம் 1 ஆனி 1992

தனிப்பிரதி 5 DM

பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் :

**Marxist Perspecktive**

**Postfach 1609 , 7120 Bietigheim-Bissingen**

# தொழிலாளர்பாதை

நான்காவதுஅகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைப்பிரிவினால் வெளியிடப்படுகின்றது



தொழிலாளர் பாதை

ஈராக், யூகோசலவியா: ஏகாதிபத்திய யுத்தத் தயாரிப்பு

இனவாத யுத்தத்திற்கு முடிவுகட்டு!

தனிப்பிரதி : **2.00 DM**

வருடசந்தா : **26.00 DM**

**Thollilalar Pathai**

**Postfach 1609**

**7120 Bietigheim-Bissingen.**



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Contacts
Thollilar Pathai
Postfach 1609
7120 Bietigheim-Bissingen

Information and Registeration :
Konferenz gegen Rassismus und Kriegsgefahr
am 5. /6. Dezember 1992 in
Frankfurt am Main
BSA Postfach 100 105, 4300 Essen
Telefon: 0201 / 755475

DM 1.-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்